**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ம் நாள் புதன்கிழமை

**இ.ஏ.எண்.4/2025 அதன் இ.ஏ.எண்.2/2024**
**அதன் இ.பி.எண்.120/2022 அதன் அ.வ.எண்.758/2008**

தனுஷ்கோடி ... மனுதாரர்/மனுதாரர்/ மனுதாரர்/வாதி

/எதிர்/

1) சங்குத்தேவர் (இறப்பு)
2) முருகன்
3) மாரியம்மாள் ... எதிர்மனுதாரர்கள்/ எதிர்மனுதாரர்கள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது 02.04.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.வெங்கடேஷ்வரமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் இறந்து விட்டார். 2 ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராக உள்ளார். 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சிவசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும் மனு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் 18 பிரிவு 151 ன் படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

இம்மனுவின் மனுதாரர் நிறைவேற்றுகை மனுவின் மனுதாரர் என்றும், இ.ஏ.எண்.2/2024 மனுவில் 2, 3 எதிர்மனுதாரர்களை பொறுத்து தினமலர்

நாளிதழில் அறிவிப்பு செய்த பின்பு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கடந்த 06.10.2025ம் தேதி அவரது வழக்கறிஞர் குறிப்பாணை தாக்கல் செய்த பின்பு தான் 3ம் எதிர்மனுதாரரின் பெயர் மாலையம்மாள் என்பது மாரியம்மாள் என்ற விபரம் தெரிய வந்தது என்றும், எனவே 3ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இ.ஏ.எண்.2/2024 மனுவினை இம்மனுவில் கண்ட விபரப்படி சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் எனக் கூறி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

**3) எதிருரை சுருக்கம்**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது சட்டத்தின் படியோ அல்லது பொருண்மைகளின் படியோ நிலைக்கத்தக்கதல்ல என்றும், எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும், 3ம் எதிர்மனுதாரர் பெயரானது 06.10.2025ம் தேதி தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணைக்கு பின்னர் தான் மாரியம்மாள் என்று தெரிய வந்தது என மனுதாரர் கூறியிருப்பது தவறானது என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள பொய்யான இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும், 3ம் எதிர்மனுதாரர் தினமலர் நாளிதழில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பின் அடிப்படையில் தான் ஆஜரானார் என்றும், எனவே, இம்மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியம் எதுவும் இல்லை. சான்று ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5) **இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுவில் குறிப்பிட்டுள்ளபடி இ.ஏ.எண்.2/2024 மனுவினை சீர்திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.**

6) இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7) இம்மனுவின் மனுதாரர் நிறைவேற்றுகை மனுவின் மனுதாரர் ஆவார். இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் நிறைவேற்றுகை மனுவின் எதிர்மனுதாரர்கள் ஆவார்கள். நிறைவேற்றுகை மனுவானது, மனு தபசில் வீட்டிலிருந்து எதிர்மனுதாரரரை அப்புறப்படுத்தி அதன் காலி சுவாதீனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனு மற்றும் எதிருரையை பரிசீலனை செய்கையில், 1ம் எதிர்மனுதாரர் இறந்து விட்டதால், 2, 3 எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்ப்பதற்காக மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 50ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது இ.ஏ.எண்.2/2024 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, நிலுவையில் உள்ள போது, கடந்த 06.10.2025ம் தேதி 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணையில் 3ம் எதிர்மனுதாரர் பெயர் மாலையம்மாள் இல்லை என்றும், மாரியம்மாள் என கூறப்பட்டுள்ளது. மேற்படி குறிப்பாணையின் அடிப்படையில், இ.ஏ.எண்.2/2024 மனுவில் 3ம் எதிர்மனுதாரர் பெயரை திருத்தம் செய்வதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) நிறைவேற்றுகை மனுவானது 2022ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருகிறது. இந்த நிலையில், 1ம் எதிர்மனுதாரர் இறந்து விட்டதால், அவரது வாரிசுகளான 2, 3 எதிர்மனுதாரர்களை சேர்க்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவில் 3ம் எதிர்மனுதாரர் பெயரானது, 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணையின் அடிப்படையில் தான் மனுதாரருக்கு சரியான பெயர் தெரிய வந்துள்ளது. இம்மனுவை அனுமதிக்காவிட்டால், நிறைவேற்றுகை மனுவில் எந்தவிதமான உத்தரவையும் பிறப்பிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடும். இம்மனுவானது 3ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த குறிப்பாணையின் அடிப்படையில் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனால் 3ம் எதிர்மனுதாரருக்கு எந்தவித

ஆட்சேபணையும் இருக்க வாய்ப்பில்லை. எனவே, நீதியின் நலன் கருதியும், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இம்மனுவை அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியில், இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ம் நாளாகிய இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

Orders uploded on 15.04.2026.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.04.15 18:08:32 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
திருநெல்வேலி.

**1). மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்** – இல்லை
2**). எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்** – இல்லை.

MARIMUTHU R MUNIYASAMY

Orders uploded on 15.04.2026.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.04.15 18:08:42 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
திருநெல்வேலி.

மு.மா.உ.நீ. திருநெல்வேலி
இ.ஏ.எண்.4/2025
இன்
இ.ஏ.எண்.2/2024
இன்
இ.பி.எண்.120/2022
இன்
அ.வ.எண்.758/2008
நாள். 15.04.2026
வரைவு/நேரிய உத்தரவு